**O.S.No.120/2018**

**PW1 :** சந்திரசேகரன் தேதி 11.09.2025

வாசா 1 சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு, 4ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

வாதி என் மனைவி. அவர் ஏன் சாட்சியம் அளிக்க வரவில்லை என்றால் அவருக்கு உடல்நலம் சரியில்லாததால் அவர் வரவில்லை. என் மனைவியை 1ம் பிரதிவாதியின் கணவர் தத்து எடுத்துக்கொண்டதற்கான ஆவணம் என்ன உள்ளது என்றால் ஆவணம் எதுவும் இல்லை. இவ்வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பாக அரசு தரப்பினரை பிரதிவாதியாக சேர்க்கும்பட்சத்தில் அதற்குரிய சட்டப்பிரிவின் கீழ் அறிவிப்பு அனுப்பப்பட வேண்டும் என்று சொன்னால் அது எனக்கு தெரியாது. 4ம் பிரதிவாதியை பொறுத்து நான் எந்த பரிகாரமும் கேட்கவில்லை என்றால் சரிதான். 4ம் பிரதிவாதி இவ்வழக்கிற்கு சம்பந்தப்பட்ட இல்லை என்பதால் அவரை இவ்வழக்கில் தேவையற்ற தரப்பினராக சேர்த்திருக்கிறேன் என்றால் சரியல்ல. 4ம் பிரதிவாதி சார்பதிவாளர் என்பதால் அவர் அரசு விதிகளின்படி எந்த ஒரு ஆவணத்தையும் பதிவு செய்ய மறுக்க இயலாது என்றும், அவர் விதி முறைகளின் படி பணியாற்றுகிறார் என்றும், மேற்படி எங்களுக்கு இடையேயான பிரச்சினைகளுக்கு சார்பதிவாளர் பொறுப்பாக மாட்டார் என்று சொன்னால் சரியல்ல.